அரசு கலைக்கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர் - 641018

பி. ஏ தமிழ் - முதலாம் ஆண்டு
இலக்கணம் - நன்னூல் - சொல்
இரண்டாம் பருவம் - 18BTA23C

# அலகு - 4 இடையியல்


பெயர் : மு. ஜோதி
துறை : தமிழ்த்துறை
அலைபேசி : 9487193006

# இடையியல்

**இடைச்சொல்லின் பொது இலக்கணம்**

***வேற்றுமை வினை சாரியை ஒப்புருபுகள்***
***தத்தம் பொருள இசைநிறை அசைநிலை***
***குறிப்பு என் எண் பகுதியில் தனித்தியல் இன்றிப்***
***பெயரினும் வினையினும் பின்முன் ஓரிடத்து***
***ஒன்றும் பலவும் வந்து ஒன்றுவது இடைச்சொல்***

ஐ முதலாகிய வேற்றுமை உருபுகள், வினையோடு வரும் கால இடைநிலை, வினைமுற்று விகுதிகள், அத்து, அம் போன்ற சாரியைகள் உவம உருபுகள், தத்தம் பொருள் உணர்த்துபவை, இசைநிறைக்க வருபவை, அசைநிலையாக வருபவை, குறிப்புப் பொருள் உணர்த்துபவை என்பவை இடைச் சொற்களாகும். இவ்விடைச் சொற்கள் தனித்தியங்கும் ஆற்றலின்றிப் பெயரோடும் வினையோடும் பின்னும் முன்னும் ஒன்றோ பலவோ சேர்ந்து வரும்.

**இடைச் சொல்லின் பொருள்கள்**

**தெரிநிலை தேற்றம் ஐயம் முற்று எண் சிறப்பு**
**எதிர்மறை எச்சம் வினா விழைவு ஒழியிசை**
**பிரிப்புக் கழிவு ஆக்கம் இன்னன இடைப் பொருள்**

இடைச் சொற்கள் தெரிநிலை, தேற்றம், ஐயம், முற்று, எண், சிறப்பு எதிர்மறை, எச்சம். வினா, விழைவு, ஒழியிசை, பிரிநிலை, கழிவு, ஆக்கம் என்னும் பதினான்கு பொருளையும் இவை போன்ற பிற பொருளையும் தரும் இப்பொருள்களைப் பல்வேறு உணர்த்துகின்றன இடைச் சொற்கள்

1. தெரிநிலை: ஆணும் அன்று பெண்ணும் அன்று என்பதால் அலி தெரிநிலை (உம்)

2 தேற்றம்: உண்டே மறுமை (ஏ)
3. ஐயம் : குற்றிகொல்வோ மகன் கொல்லோ (கொல்)
4. முற்று : தமிழ் நாட்டு மூவரும் வந்தார் (உம்)
5. எண்: நிலனென நீரென, தீயென வளியென (என)
6. சிறப்பு: குறவரும் மருளும் குன்றத்துப் படினே (உம்)
7. எதிர்மறை: சாத்தன் வருதற்கும் உரியன் எனில் வாராமைக்கும் உரியன் (உம்)
8. எச்சம்: கொற்றனும் வந்தான் (உம்)
9. வினா: குற்றியோ ? மகனோ ? (ஓ)
10. விழைவு: சின்மொழி அரிவையைப் பெருகதில் அம்ம (jpல்)
11. ஒழியிசை: வருகதில் அம்ம எம் சேரி (தில்)
12 பிரிநிலை: அவர்களுள் இவனே கொண்டான் (V)
13. கழிவு: எமக்கு ஈயும் மன்னே (மன்)
14. ஆக்கம் - பண்டு காடுமன் இன்று கயல் பிறமும் வயலாயிற்(மன்)

**என, என்று என்னும் இடைச்சொற்கள்**

**வினைபெயர் குறிப்பு இசை எண் பண்பு ஆறினும்**
**என வெனும் மொழி வரும் என்றும் அற்றே**

வினை, பெயர், குறிப்பு, இசை, எண், பண்பு என்னும் ஆறு பொருளையும் என, என்று என்னும் இரண்டு இடைச் சொற்களும்உணர்த்தும்.

**சில எண்ணிடைச் சொற்களுக்கு இலக்கணம்**

**பெயர்ச் செவ்வெண் ஏ என்றா எனா என்**
**நான்கும் தொகைபெறும் உம்மை என்று என ஓடு**
**இந்நான்கு எண்ணும் அஃதின்றியும் இயலும்**

பெயர்களிடத்து எண்ணிடைச் சொல்லாகத் தொக்கு வருகின்ற செவ்வெண், ஏ, என்றா, எனா என்னும் நான்கும் இத்தனை என்று

கணக்கிட்டுச் சொல்லும் தொகைச்சொல் (இருவரும், மூவரும்) பெற்றுவரும். உம், என்று. என, ஓடு என்னும் இந்நான்கும் தொகைச்சொல் பெற்றும் வரும்; பெறாமலும் வரும்.

**தில் என்னும் இடைச்சொல்**

**விழைவே காலம் ஒழியிசை தில்லே.**

இல் என்னும் இடைச்சொல் விழைதல் எனப்படும் விருப்பம் காலம், மறைந்திருக்கும் ஒழியிசை என்னும் மூன்று பொருளையும் உணர்த்தும்

**1.விழைவு** -

**அரிவையைப் பெறுகதில் அம்ம யானே**

பெண்ணைப் பெற வேண்டும் என்னும் ஆசையை வெளிப்படுத்துதல்

2.காலம் -

**பெற்றாங்கு அறிகதில் அம்ம இவ்வூரே**

பெற்ற காலத்தில் அறிந்து கொள்ளட்டும் என்னும் பொருள் உணர்த்துதல்

3. **ஒழியிசை**

**வருகதில் அம்ம எம்சேரி சேர**

வந்தால் இன்னது செய்வேன் என்னும் பொருள் மறைந்துள்ளது.

**மன் என்னும் இடைச்சொல்**

**மன்னே அசைநிலை ஒழியிசை ஆக்கம்**
**கழிவு மிகுதி நிலைபேறு ஆகும்**

மன் என்னும் இடைச்சொல் அசைநிலை, மறைந்து நிற்கும் அழியிசைப் பொருள், ஆக்கம், கழிவு, மிகுதி, நிலைபேறு என்னும் ஆறு பொருளை உணர்த்தும்

**1. அசைநிலை - அது மன் கொண்கன் தேரே**

அது கொண்கன் தேரே என்றாலே அதே பொருள்தான். அதனால் மன் என்பது எந்தப் பொருளையும் உணர்த்தாமல் அசை நிலையாக வந்துள்ளது.

**2.ஒழியிசை- கூரியதோர் வாள்மன்**

கூர்மையாக இருந்த வாள் போரிட்டு மழுங்கி விட்டது என்னும் ஒழிந்த பொருளை உணர்த்துகின்றது.

**ஆக்கம்** - பண்டு காடுமன்

முன்பு காடாக இருந்தது தற்போது வயலாயிற்று என்னும் ஆம் பொருளை உணர்த்துகின்றது

4. **கழிவு** - சிறியகள் பெறினே எமக்கு ஈயும் மன்னே அதியமான் இறந்து போனதால் முன்பு கிடைத்தது தற்போதுகிடைக்கவில்லை

5. **மிகுதி** - எந்தை எமக்கு அருளும்மன் என் தந்தை எனக்கு மிகுதியாக அருளுவான் என்னும் பொருளைஉணர்த்துகின்றது

6. **நிலைபேறு** - மன்னா உலகத்து மன்னியது புரிமோ

மன்னா, மன்னியது இரண்டும் மன் என்னும் அடிச் சொல்வழியாக் பிறந்தவை. நிலையில்லா உலகில் நிலைபேறு உடையவற்றைச் செய்க என்னும் பொருள் உணர்த்திற்று

**மற்று என்னும் இடைச்சொல்**

***வினைமாற்று அசைநிலை பிறிதுஎனும் மற்றே.***

மற்று என்னும் இடைச்சொல் வினை மாற்று, அசைநிலை, வேறு என்னும் பொருள் தரும் பிறிது என்னும் பொருளை உணர்த்தும்

1. **வினைமாற்று-** மற்று அறிவாம் நல்வினை

யாம் இளையம் என்னாது பிறகு அறிவாம் என்னும் வினையை மாற்றி இளமையிலேயே நல்வினையை விரைந்து அறிவாம் என்னும் பொருளை மாற்றித் தருகின்றது.

2. **அசை நிலை - மற்றென்னை ஆள்க**

என்னை ஆள்க' என்பதே பொருள். மற்று என்னும் பொருளுக்கு எந்தப் பொருளும் இல்லாததால் அது வெறும் அசைச்சொல்

3. **பிறிது** _ ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினும் தான்முந் துறும்

மற்றொன்று என்பது வாழ் வினைக்கு மறுதலையாகும் ஒன்று எனப் பிறிது பொருள் தருகின்றது

**கொல் என்னும் இடைச்சொல்**

***கொல்லே ஐயம் அசைநிலைக் கூற்றே***

கொல் என்னும் இடைச் சொல் ஐயப்பொருள் உணர்த்தும் சொல்லாகவும் அசை நிலைச் சொல்லாகவும் வரும்

1. **ஐயம்-** அவன் சாத்தன்கொல் கொற்றன் கொல்

வந்தவன் சாத்தனா அல்லது கொற்றனா எனக் கொல் ஐயப் பொருளைத் தருகின்றது

2. **அசைநிலை -** கற்றதனால் ஆய பயன் என்கொல்

கற்றதனால் ஆகிய பயன் என்ன? என்னும் பொருளைக் கொல் என்னும் இடைச்சொல் இல்லாமலேயே அத்தொடர் கொடுக்கின்றது. எனவே கொல் இத்தொடரில் பொருளற்ற அசைச்சொல்,

**முன்னிலை அசைச்சொற்கள்**

**மியா இக மோ மதி அத்தை இத்தை**
**வாழிய மாள ஈ யாழ் முன்னிலை அசை**

மியா, இக, மோ, மதி, அத்தை, இத்தை , வாழிய, மாள, ஈ, யாழ என்பவை முன்னிலையில் வரும் அசைச் சொற்கள் ஆகும்

1.மியா - கேண்மியா

2. இக - காணிக

3. மோ - மொழிமோ

4. மதி - காண்மதி

5. அத்தை - சொல்லியரத்தை

6. ,j;ij - நீ ஒன்று பாடித்தை

7. வாழிய - காணிய வாழிய

8. மாள - தவிர்ந்தீக மாள

9. ஈ - சென்றீபெரும

10. யாழ் - நீயே செலவயர்ந்தியாழ

மேற் குறிக்கப்பட்ட இடைச்சொற்கள் நீ காண், மொழி போன்ற முன்னிலை வினைகளோடு வருவதால் முன்னிலை அசைச் சொற்கள் எனப்படுகின்றன

**எல்லா இடத்தும் வரும் அசைச்சொற்கள்**

***யா கா பிற பிறக்கு அரோ போ மாது இரும்***

சின் குரை ஒரும் போலும் இருந்து இட்டு அன்று ஆம் தாம் தான் கின்று நின்று அசைமொழி. யா, கா, பிற, பிறக்கு, அரோ, போ, மாது, இரும், சின், குரை, ஒரும் போலும், இருந்து, இட்டு, அன்று, ஆம், தாம், தான், கின்று, நின்று என்னும் இருபது அசைச் சொற்களும் தன்மை, முன்னிலை, படர்க்கை என்னும் மூவிடங்களிலும் வரும் அசைச் சொற்களாகும்.

1. யா - யா பன்னிருவர் மாணாக்கர்
2 .கா - இவள் காண்டிகா
3. பிற - ஆயனை அல்ல பிற
4. பிறக்கு : பிறக்கு அதனுள் செல்லான்
5. அரோ : குயில் ஆலும் அரோ
6. போ - வாழாதேன்போ
7. மாது -விளிந்தன்று மாதோ
8. இரும்- கண்டிகும் அல்லமோ
9. சின் -கேட்டிசின்
10. குரை : பால் குரைத்துன்பம்
11. ஒரும் - அஞ்சலதோரும் அறனே
12. போலும் - kகிழ்ந்தனை போலும்
13. இருந்து - எழுத்திருந்தேன்
14 இட்டு பிறந்திட்டான்
15. அன்று - சேர்து மன்றே

16.ஆம் - பணியுமாம் என்றும்

17. தாம் - நீர்தாம்

18. தான் - நீதான்

19. கின்று - ஆசைப்பட்டிருக்கின்றேன்

20. நின்று - துணையாய் நின்றான்

இவ்வாறு இடையியலில் இடைச்சொல்லின் விளக்கமும் பொருளும் வரும் இடங்களும் விளக்கப்பட்டுள்ளன